24

## தேர்ச்சி - நான்கு :-
## ஆற்றல் மிக்க செபத்தில் ஈடுபடுவர்

# 4.5 தாழ்மையான மனத்தோடு செபிப்போம்

கிறிஸ்தவ செபம் என்பது எமது உள்ளத்தில் செயற்படும் தூய ஆவியின் செயலாகும். இறைவன்பால் எமது இதயங்களை எழுப்பி அவரிடம் விண்ணப்பிப்பதாகும்.

**நாம் இயேசுவின் பெயரால் கேட்போம் (யோவான் 16:24)**

**ஆண்டவர் இயேசுவிடம் செபிப்போம் (2கொரி. 12:8; எபே 5:19)**

**இறைதந்தையிடம் அன்போடு செபிக்கும் இயேசுவோடு இணைந்து செபிப்போம் (மத். 11:25)**

தூய ஆவியின் ஏவுதலால் கிறிஸ்துவில் இறைதந்தையோடு ஏற்படுத்திக் கொள்ளும் உறவு செபமாகும்.

நாம் செபிக்கும் போது இறைவனில் விசுவாசம் கொண்டு அவரை நன்கு புரிந்து கொள்வதோடு எம் வாழ்நாள் முழுவதும் அவரிடம் வேண்டுவதாகும். திருவிவிலியம் எமது விசுவாசத்தை வளர்ப்பதோடு இறைவனுடன் மனதாலும் இதயத்தாலும் தொடர்பு கொள்வதற்கு வழிவகுக்கிறது.

நமது பக்தி முயற்சிகள், நவநாட்கள், சிலுவைப்பாதை, செபவழிபாடுகள் ஆகியவை மூலம் இறைவனோடு தொடர்பு கொள்கிறோம். செபத்தின் மூலம் இறைவனோடு ஆழமாக உறவு கொள்ள எம்மால் முடியாமைக்கு எமது குறைவான விசுவாசமே காரணமாகும்.

எனவே, தாழ்மையாகவும் அமைதியாகவும் செபிக்கும் போது இருக்க வேண்டிய சில பண்புகளைக் கருத்தில் கொள்வோம்.

- செபத்திற்காக ஒதுக்கும் நேரம்
- பயன்படுத்தும் சொற்கள்
- செபிப்பதற்கான எமது முயற்சி
- ஆழ்ந்த அமைதி
- எமது முழு உள்ளமும் இறைவனோடு ஒன்றித்தல்.

நீங்கள் செபிக்கும்போது மேற்கண்ட பண்புகளோடு மேலும் பின்பற்றக்கூடிய பண்புகளை இதில் எழுதுங்கள்.

- ..............................................................................
- ..............................................................................
- ..............................................................................

செபத்தின் வழியாக இறைவனோடு தொடர்பு கொள்ளும் எல்லா சந்தர்ப்பங்களிலும் இறை அன்பை ஆழமாக அனுபவிக்கின்றோம்.

நாம் இறைவனின் பிள்ளையாகும் வரத்தை பெற்றுக்கொள்கிறோம். இறைபிள்ளையாகி, தன் வாழ்நாளை செபத்தில் கழிக்கும் ஒருவரால் உண்மையான திராட்சைச் செடியின் பலனைத் தர முடியும்.

கிறிஸ்தவ வாழ்வில் காணப்படும் நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகிய இறை சார்ந்த புண்ணியங்கள் செயல்பட்டு எம் வாழ்வு பலனளிக்க செபம் அவசியமாகும்.

சமூகத்தில் வாழும் நாம் உண்மைக் கிறிஸ்தவராக சான்று பகர்வதற்கு செபத்தின் வழியாக எம் வாழ்விற்கு ஊட்டம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**எதற்காக, எப்படி நாம் இறைவனிடம் வேண்டுவது என்பது எமக்குத் தெரியாது. தூய ஆவியார் தாமே சொல் வடிவம் பெறமுடியாத நம்முடைய பெருமூச்சுகளின் வாயிலாய் நமக்காகப் பரிந்து பேசுகிறார்.**

**(உரோ. 8: 26)**

அன்பை அடிப்படையாகக் கொண்டு தாழ்மையான மனதுடன் அமைதியாக செபிக்க வேண்டும்.

அதேவேளை எமது செபத்தை பிறர் புகழவேண்டும் என்பதற்காக செபிக்கக் கூடாதென யேசு கூறுகிறார்.

நீங்கள் இறைவனிடம் வேண்டும் பொழுது, வெளிவேடக்காரரைப்போல் இருக்க வேண்டாம். அவர்கள் தொழுகைக் கூடங்களிலும் வீதியோரங்களிலும் நின்றுகொண்டு மக்கள் பார்க்க வேண்டுமென இறைவேண்டல் செய்ய விரும்புகிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். ஆனால் நீங்கள் இறைவனிடம் வேண்டும் பொழுது உங்கள் உள்ளறைக்குச் சென்று, கதவை அடைத்துக் கொண்டு, மறைவாய் உள்ள உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்கு கைம்மாறு அளிப்பார். மேலும் நீங்கள் இறைவனிடம் வேண்டும் பொழுது பிற இனத்தவரைப் போலப் பிதற்ற வேண்டாம். மிகுதியான சொற்களை அடுக்கிக் கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படும் என அவர்கள் நினைக்கிறார்கள். (மத்தேயு 6:5–7)

எனவே அமைதியாகவும், தாழ்மையாகவும் இறைத்தந்தைக்குப் பிரியமான முறையில் செபிப்பதால் மிகுந்த பலனைப் பெற முடியம். அதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். நீங்களும் இவ்வாறு செபிக்கிறீர்களா என சிந்தியுங்கள். நீங்களும் அவ்வாறே முயற்சி செய்யுங்கள். நீங்கள் நிச்சயமாக மிகுந்த பலனடைவீர்கள்.

**பரிசேயனும் ஆயக்காரனும் செபம் செய்த முறை**



**ஆனால் வரிதண்டுபவர் தொலையில் நின்று கொண்டு வானத்தை அண்ணாந்து பார்க்கக்கூடத் துணியாமல் தம் மார்பில் அடித்துக்கொண்டு, கடவுளே பாவியாகிய என்மீது இரங்கியருளும் என்றார்.**

**(லூக். 18:13)**

இவ்வுவமையின் மூலம் கிறிஸ்து எமக்கு பல பாடங்களைக் கற்றுத் தருகிறார்.

- ☆ செபிக்கும் போது பிறரைத் தாழ்த்தக் கூடாது.
- ☆ செபிக்கும் போது பிறர் எம்மை புகழ வேண்டுமென எண்ணக்கூடாது.
- ☆ பிறரின் கௌரவத்தைப் பெறவேண்டுமென செபிக்கக்கூடாது.
- ☆ பிறரின் கவனத்தை தன் பக்கம் திருப்ப வேண்டுமென எண்ணிச் செபிக்கக்கூடாது.
- ☆ செபிக்கும் போது தமது தவறுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நீரும் செபிக்கும் போது மேலே கூறப்பட்ட படிப்பினைகளை பின்பற்றுகிறீரா என எண்ணிப்பார்க்கவும். அவ்வாறு பின்பற்றாவிடில் உமது செபத்தையும் இறைவனுக்கு உகந்த விதத்தில் அமைத்துக் கொள்ள மேற்குறிப்பிட்ட படிப்பினைகளைப் பின்பற்ற முயற்சி செய்யவும் உமது அனுபவங்களை வகுப்பறையில் பகிர்ந்து கொள்ளவும்.

இறைவார்த்தைக்குக் கீழ்ப்படிந்ததனால் மரியா இறை அன்னையாகும் வரத்தைப் பெற்றார். இறைவார்த்தைக்குச் செவிமடுத்தலே மரியாவின் விசேட குண இயல்பாகும். அவர் தனது விருப்பத்தை இறைவனின் வல்லமைக்கு ஒப்புக்கொடுத்தார். அவரிடம் காணப்பட்ட கீழ்படிதலின் நிமித்தம் தூய ஆவியின் வரத்தால் முழுமை பெற்றார். செபத்தில் தன் வாழ்நாட்களைக் கழித்தார்.

தன்னை முழுவதும் இறைவனின் விருப்பத்திற்கு கையளித்ததனால் அவர் இறை அன்னையானார். லூக் 1:46–55 இறைவார்த்தையை வாசித்து நீங்கள் அதனை விளங்கிக் கொள்ளலாம்.

**இப்பொழுதாவது உண்ணா நோன்பிருந்து அழுது புலம்பிக்கொண்டு உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள். உங்கள் உடைகளைக் கிழித்துக் கொள்ள வேண்டாம், இதயத்தைக் கிழித்துக் கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள். (யோவேல் 2: 12)**

இதிலே மனமாற்றத்திற்காக மக்கள் அழைக்கப்படுவதைக் காண்கிறோம். செபத்தினால் மனமாற்றத்தை எம்மில் ஏற்படுத்திக் கொள்ளவும் இறை உறவைக் கட்டியெழுப்பவும் எம்மால் முடியும்.

**அறிந்து கொள்க.**

செபம் செய்வதற்கு மனதை ஒரு நிலைப்படுத்திக்கொள்ளுதல் அவசியமாகும். தாழ்மையுடனும், அமைதியுடனும் செய்யப்படும் செபத்தை முன்னிட்டு ஆண்டவர் மகிழ்ச்சி கொள்வார். செபிக்கும்போது அதைரியமடையாது இடைவிடாமல் செபிப்பதனால் மிகுதியான பலன் பெற முடியும். தாழ்மையான உள்ளத்தோடு செபிப்பதன் மூலம் இறை ஆசீரையும் மன அமைதியையும் எம்மால் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

## செயற்பாடு

உங்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சியடைந்த சந்தர்ப்பங்களை நினைவுபடுத்திக் கொள்ளவும். இறைவனுக்கு நன்றி கூறி சிறிய செபம் ஒன்று தயாரிக்கவும். வகுப்பில் ஏனைய மாணவர்களோடு கலந்துரையாடவும்.